# ஜனவிநோதினி.

இல. ௯. செப்டெம்பர்மீ 1871. புஸ்த. II.

## ஹுங்கா என்னும் தீவருகேயுள்ள ஓர் அதிசயமான குகை.

---

தென்சமுத்திரத் தீவுகளில் ஒன்றாகிய ஹுங்கா என்னும் தீவின் மேல்கரைக்குச் சமீபத்தில் மிகவும் அதிசயமான ஓர் குகையிருக்கின்றது. அவ்விடத்தில் கடல்நீர்மட்டத்திற்குமேல் அறுபது அல்லது எழுபதடி உயரமுள்ள கற்பாறையொன்றிருக்கின்றது. இது சாதாரணமான கற்பாறைகளுக்கொப்பாயிராமல், இயல்பாய் மத்தியில் குடைந்தெடுக்கப்பட்டு உள்ளே ஓர் விஸ்தாரமான குகையை உடைத்தாயிருக்கின்றது. இக்குகைக்கு ஒரே ஒரு திறப்புண்டு. இத்திறப்பு அக்கற்பாறையின் ஓர் பக்கத்தின் அடிவாரத்தில் நீர்மட்டத்திற்குக் கீழ் ஆறேழடி ஆழத்திலிருக்கின்றது. ஆகையால் இத்திறப்பின் வழியாகக் கடல்ஜலமானது குகைக்குள் கொஞ்சதூரமட்டும் பாய்கின்றது. ஹுங்கா தீவரசனாகிய பீனோ என்பவர் சில சமயங்களில் தம்மிஷ்டர் மந்திரிப் பிரதானிகள் முதலியவர்களோடு இக்குகைக்குள் பிரவேசித்து, அங்கே கொஞ்சநேரந் தங்கியிருந்து போஜனபானஞ்செய்து, சந்தோஷமாய்க் காலத்தைப் பின்னிட்டுவிட்டுத் திரும்புவது வழக்கமாயிருந்தது. அப்படியே ஒருநாள் சாயுங்காலவேளையில் அவ்வரசன் அக்குகைக்குப் போகத் தீர்மானித்து, அவரும் அவரைச் சேர்ந்த பிரதானிகள் முதலியவர்களும் ஒருவர்பின் ஒருவராக அதற்குள் பிரவேசித்தார்கள். அச்சமயத்தில் அத்தீவில் அநேக வருஷம் வாசம்பண்ணினவரும், இச்சரித்திரத்தை எழுதினவருமாகிய மேஸ்டர் மாரினர் (Mr. Mariner) என்பவர் தற்செயலாய் அக்கடல்கரையோரமாய் வந்தபோது, அரசனுடைய பிர

தானிகள் ஒருவன்பின் ஒருவனுகக் கடலில் பாய்ந்து முக்கு ளித்து மறைந்துபோவதைக் கண்டு, மிகவும் ஆச்சரியப்பட்டு, கடைசியில் கடலிற்பாய எத்தனித்துக்கொண்டிருந்த மனிதனுக் குச் சமீபமாய்ப்போய் அவனை நோக்கி: "நீங்கள் இப்பொழுது செய்கிற காரியம் மகா ஆச்சரியமாயிருக்கிறது. இது எனக்குச் சற் றேனும் விளங்கவில்லை. ஆகையால் தயவுசெய்து இதன் இரக சியத்தை எனக்கு விளக்கிக்காட்டு" என்றார். அதற்கவன்: "நீர் எனக்குப்பின் முக்குளித்து வருவீரானல், முன் ஒருக்காலும் நீர் பார்த்திராத மகா அதிசயமான ஓரிடத்திற்கு உம்மை அழைத் துக்கொண்டுபோவேன்" என்றான். இதற்கு அவர் சம்மதித்து, அவனுக்குப்பின்னே கடலிற்பாய்ந்து முக்குளித்துச்செல்ல,இருவ ரும் அக்கற்பாறையிலுள்ள திறப்பைக்கடந்து குகைக்குள்போய் ஜலத்திற்குமேலெழுந்தார்கள். மேஸ்டர் மாரினர் குகைக்குள் பிரவேசித்துத் தலையை ஜலத்திற்குமேலெடுத்தஉடனே அரசன் மந்திரி முதலானோருடைய பேச்சுசப்தத்தைக் கேட்டு ஆச்ச ரியமும் சந்தோஷமுமடைந்தார். பின்பு அவருடன்கூட குகைக் குள் பிரவேசித்த பிரதானியானவன் அவருக்குக் கைலாகுகொ டுத்து, ஜலத்திற்குமேலெழும்பியிருந்த ஒரு பாறையின்மேல் அவர் மெதுவாய் ஏறி உட்காரும்படிசெய்தான். ஜலத்தின் அடியிலுள்ள பொருட்களால் பிரதிபிம்பிக்கப்பட்டுவரும் மிகவும் சொல்பமான ஒளியைத் தவிர வேறு வெளிச்சம் இக்குகைக் குள் பிரவேசிக்க இடமில்லாததினால், அது சற்று இருளடைந்தே யிருக்கும். ஆகையால் ஆட்கள் அதற்குள் பிரவேசித்தஉடனே சில நிமிஷநேரமட்டும் அவர்களுக்கு ஒன்றுந்தெரியமாட்டாது. அப்பால் அங்குள்ள இருட்டுக்குக் கண்பழகிப்போகப் பூடிப்படி யாய்ப் பொருட்கள் சற்று தெளிவாய்க் காணப்படும். மாரினர் என்பவர் குகைக்குள் பிரவேசித்துச் சற்றுநேரமானபின் பீனோ என்னும் அரசனும், அவன் சிநேகிதரும் குகைக்குள் ஓரிடத்தில் சவுக்கியமாய் உட்கார்ந்திருப்பதைக் கண்டு சந்தோஷப்பட்டார். மேலே காட்டியபிரகாரம் குகைக்குள் போதுமான வெளிச்சமில் லாததினால், மாரினர் குகைக்குள்ளிருந்து திரும்ப முக்குளித்து வெ ளியேவந்து கரையேறித் தம்முடைய கைத்துபாக்கியில் மருந்து செலுத்தி கெட்டித்து, அதில் ஜலம்படாதபடிக்கு அதைப் பஞ்சு வாழையிலை முதலியவற்றில் நன்றாய்ப் பொதிந்துகட்டித் தன்

கையில் எடுத்துக்கொண்டு, தம் வேலையாள் ஒருவனை ஓர் தீவர்த்தியை அவ்வாறே பத்திரமாய் எடுத்துக்கொண்டு தம் பின்னே வரும்படி உத்தரவுகொடுத்து, இரண்டாந்தரம் கடலிலிறங்கி. முக்குளித்துக் குகைக்குள் பிரவேசித்து, துபாக்கி சுட்டு, காய்ந்த பஞ்சினால் நெருப்புண்டாக்கித் தீவர்த்தியைக் கொளுத்தி அதினால் குகையை மிகவும் பிரகாசமாக்கினார். அக்குகை சிருஷ்டிக்கப்பட்டதுமுதல் அந்நாள்வரைக்கும் இவ்வித வெளிச்சத்தைக் கிஞ்சித்தும் கண்டதேயில்லை. அவர்கள் இவ்வெளிச்சத்தின் உதவியினால் குகைக்குள்ளெங்கும்போய் நன்றாய்ப் பார்த்தபோது, அது உத்தேசம் அறுபதடி அகலமும், நாற்பதடி உயரமுமுள்ளதாகக் காணப்பட்டது. அதன் பக்கங்களுக்குள் சில சிறு குகைகளோடியிருக்கவுங் கண்டார்கள். இவ்வாறு அவர்கள் அக்குகையைப் பரிசோதித்துப் பார்த்தபின், ஓரிடத்தில் உட்கார்ந்து போஜனபானஞ்செய்துவிட்டு, கொஞ்சநேரம் பற்பல சங்கதிகளைப் பற்றிச் சந்தோஷமாய்ப் பேசிக்கொண்டிருந்தார்கள். அப்போது அங்கிருந்த ஓர் விருத்தாப்பிய மனிதன் அக்குகை முதலாவது கண்டுபிடிக்கப்பட்ட விதம்முதலியவற்றைப்பற்றிப் பின்வரும் இன்பமான சரித்திரத்தைச் சொன்னான்.

அநேக வருஷங்களுக்குமுன் ஹூங்கா தீவிலிருந்த ஓர் பால்ய பிரதானியானவன் ஒருநாள் கடலிலிறங்கி மேற்சொல்லிய கற்பாறைக்குச் சமீபத்தில் நீந்தி விளையாடுகையில், ஒரு கடலாமையைக் கண்டு அதைப் பிடிக்கும்படி அதன் பின்தொடர்ந்து முக்குளித்துச் செல்லுகையில், அது குகைக்குள் பிரவேசிக்க, அவனும் அதற்குப்பின்னே தொடர்ந்தபோது அக்குகையைக் கண்டுபிடித்தான். அதற்குமுன் அக்குகையை அறிந்தவர்கள் ஒருவருமில்லை. அவன் அதைக் கண்டுபிடித்தவுடனே அதை ஒருவருக்கும் வெளிப்படுத்தாமல், ஓர் பெரிய இரகசியமாய் வைத்திருந்தான். இதற்கு முகாந்தரமியாதெனப் பின்வருஞ்சங்கதியினால் அறிந்துகொள்ளலாம்.

அநேக வருஷங்களுக்குமுன் இத்தீவிலுள்ள வாவு என்னும் பட்டணத்தில் ஓர் கொடுங்கோலரசன் ஆளுகைசெய்துகொண்டிருந்தான். அவன் ஜனங்களை மிகவும் ஒடுக்கி, வெகு அக்கிரமங்களை நடப்பித்துக்கொண்டுவந்தான். ஆகையால் அவனுக்குக் கீழ்ப்பட்டப் பிரதானிகளிலொருவன் அவ்வரசனுடைய துன்

மார்க்க நடக்கைகளைச் சகிக்கமாட்டாமல், அவனுடைய பிரஜைகளுக்குள் கலகருணத்தையுண்டுபண்ணி, அவர்கள் ஒருமனப்பட்டு அரசனை எதிர்க்கும்படி செய்து, அதினால் தங்களைக் கசப்பான அடிமைத்தனத்தில் வைத்திருந்த அவ்வாசனுடைய ராஜ்ஜியபாரத்திற்கு முடிவுண்டாக்கிச் சகல ஜனங்களுக்கும் பெரிய க்ஷேமத்தையுண்டுபண்ணவேண்டுமென்று தீர்மானித்ததுமன்றி, இத்தீர்மானத்தை நிறைவேற்றுவதில் தனக்கு என்ன மோசம் வந்தாலும் வரட்டுமென ஒன்றுக்கும் அஞ்சாமல் வெகு தைரியத்தோடே சில முயற்சிகளை இரகசியமாய்ச் செய்துகொண்டிருந்தான். இத்தருணத்தில் அவனைச்சேர்ந்த சிநேகிதர்களில் ஒருவன் விசுவாசதுரோகமாய் இச்சங்கதிகளை துஷ்ட அரசனுக்கு வெளிப்படுத்தி, தன் சிநேகிதனைக் காட்டிக்கொடுத்துவிட்டான். உடனே அரசன் கடுங்கோபங்கொண்டு அவனைப் பிடித்துக்கொண்டுபோய் நடுக்கடலில் தாழ்த்திக் கொன்றுபோடும்படிக் கட்டளையிட்டதுந்தவிர, மகா குரூரநெஞ்சமுள்ளவனாய் அம்மனுஷனுடைய மனைவி மக்கள் முதலிய வம்சத்தார் யாவரையும் சங்கரித்து நிர்மூலமாக்கிப்போடவேண்டுமென்ற மகா கொடிய தீர்ப்பும்பண்ணினான். இப்பிரதானியுடைய குமாரத்திகளில் ஒருத்தி மகா சௌந்தரிய ரூபமுள்ளவளும், சிறந்த குணாதிசயங்களையுடையவளுமாயிருந்தாள். இவளை அத்தீவிலுள்ள பிரதானிகளுக்குள் உயர்ந்த அந்தஸ்த்தையுடைய ஒருவனுக்கு விவாகஞ்செய்துகொடுக்க நியமித்திருந்தது. இவளும் தன் தகப்பன்வீட்டாரெல்லாரோடுங்கூட மடிந்துபோக இருக்குந் தருணத்தில், பின்னே காட்டியிருக்கும் விதமாய் அம்மோசத்திற்குத் தப்பிக்கொண்டாள்.

முன்சொல்லப்பட்ட குகையைக் கண்டுபிடித்த பிர்லீயூ பிரதானியானவனும் மேற்சொல்லிய கொடுங்கோலரசனை வெறுத்தபடியால், அவனுக்கு விரோதமாய் ஜனங்களைக் கலகத்திற்கு ஏவவேண்டுமென்று தீர்மானித்துத் தானுஞ் சில பிரயத்தனங்களை இரகசியமாய்ச் செய்துகொண்டிருந்தான். இச்சமயத்தில்தான் அவன் மேற்சொல்லிய குகையைக் கண்டுபிடித்தான். அவன் அதைக் கண்டுபிடித்தஉடனே அதை மற்றவர்களுக்கு வெளிப்படுத்தாமல் இரகசியமாய் வைத்திருந்ததற்கு முகாந்தரமென்னவெனில்: தான் அரசனுக்கு விரோதமாய்ச் செய்யும் பிரயத்தனங்கள் சித்திபெறாமல்போகுமாகில், பயங்கரமாய்ப் பழிவாங்குக்

குணத்தையுடைய அவ்வரசனுடைய கடுங்கோபத்திற்குத் தான் தப்பி ஓடிப்போய் ஒளித்துக்கொள்ளுவதற்கு அக்குகை மிக வும் ஏற்றதெனக் கண்டு அதை ஒருவருக்கும் வெளிப்படுத் தாமலிருந்தான். இப்பால்ய பிரதானியானவன் மேலே சொல்லப் பட்ட கன்னிகையின் அதிரூப சௌந்தரியத்தையும், சிறந்தகுண ங்களையும் வெகுகாலமாய்க் கவனித்து, அவள்பேரில் சொல்லி முடியாத அன்பும் ஆசையுமுள்ளவனாயிருந்தான். ஆனால் அவள் வேறொருவனுக்கு நியமிக்கப்பட்ட பெண்ணாகையால், தனக்கு அவள்பேரிலுள்ள ஆசைப்பெருக்கத்தைத் தன்னாலியன்றமட்டும் அடக்கி ஆளும்படி முயன்றுகொண்டிருந்தான். இப்படியிருக் குங்காலத்தில் அவளுடைய பிதாவானவன் அக்கொடுங்கோ லரசனுக்கு விரோதமாய்ச் செய்த பிரயத்தனங்கள் வெளிப்பட்டுப் போக, அரசன் கடுங்கோபமடைந்து, அவனையும் அவன் வீட் டாரனைவரையும் நிர்மூலமாய் அழித்துப்போடும்படி மகா குரூர ஆக்கினைசெய்தான். இதைக் கேள்விப்பட்டமாத்திரத்தில், குகை யைக் கண்டுபிடித்த பால்ய பிரதானியானவன் அக்கன்னிகையி னிடத்திற்கு விரைந்தோடிப்போய் அதிசீக்கிரத்தில் அவளுக்கு வர இருந்த மோசத்தைத் தெரிவித்து, அவளை நோக்கி: "நீ என்னை மோசக்காரனென்று நினையாது, உன் சுகவாழ்வை அத்தியந்த சிந் தையோடு கருதுகிறவனென்றே உறுதியாய் நம்பி என் ஆலோ சனைக்கு இடங்கொடுப்பாயாகில், உன்னை இப்பெருமோசத்தி னின்று ரக்ஷித்துக் காப்பாற்ற என்னால் கூடும்; நான் உன்னை என் கண்மணியைப்போல பாதுகாத்துப் பராமரிப்பேன்" என்று மிகுந்த அன்போடும் உருக்கத்தோடும் சொன்னான். இதைக் கேட்டமாத்திரத்தில் அவள் மனது அன்பினாலும் நன்றியறிந்த சிந்தையாலும் பொங்கிற்று. அவள் அவனை உத்தமசிநேகித னென்றும் மகா பெரிய உபகாரியென்றும் நம்பி, அவனுடைய நடத்துதலுக்குத் தன்னை முற்றிலும் ஒப்புக்கொடுக்கச் சம்மதித்து, அவன் கையைத் தன் இருகரங்களால் இறுகப் பிடித்துக்கொண் டாள். உடனே அவன் அவசியமான எத்தனங்களைச் செய்தபின் அன்று இராவிருட்டில் அவளை இரகசியமாய் அழைத்துக்கொ ண்டு வாவுபட்டணத்தினின்று புறப்பட்டுக் கடல்கரை சேருமட் டும் காடுகள் புதர்கள் வழியாய் நடந்துபோய், ஆயத்தமாயிருந்த ஒரு சிறுபடவில் இருவரும் ஏறிக்கொண்டு, அதிவிரைவாய்த்

தண்டுவலித்துக் குகையிருக்கும் கற்பாறைக்கு நோக்கச் சென்றார்கள். இப்படிச் செல்லுகையில், தான் அக்குகையைக் கண்டுபிடித்த வகையையும், தற்காலத்துக்கு அவளை அதற்குள் ஒளித்துவைக்கும்படி தான் யோசித்திருப்பதையும், பின்பு நல்ல சமயம் வாய்க்கும்போது அவளை அங்கிருந்து பீஜி தீவுகளுக்குக் கொண்டுபோய்ச் சேர்க்க எண்ணியிருப்பதையும் அவளிடத்தில் தெரிவித்தான். அவள் தன்னை முற்றும் அவனுடைய பராமரிப்புக்கு ஒப்புக்கொடுத்தபடியாலும், அவனிடத்தில் அவளுக்கு மிகுந்த அன்பும் நம்பிக்கையுமிருந்தபடியாலும் அவன் சொல்வதெல்லாவற்றிற்கும் உடனே இணங்கவும், அவன் போகும் வழிகளெல்லாம் தானுஞ் சற்றேனுஞ் சந்தேகியாமல் செல்லவும் மனமுள்ளவளாயிருந்தாள். அவர்கள் படவு அக்கற்பாறைக்குச் சமீபமாய்ப் போனஉடனே அவன் முன்னும் அவள் பின்னுமாக படவினின்று ஜலத்தில் குதித்து, இருவரும் ஒன்றாக முக்குளித்து குகைக்குள் பிரவேசித்து, ஜலத்தைவிட்டெழுந்து குகையின் ஓர் பாகத்தில் உட்கார்ந்து, அவன் கொஞ்சகாலத்திற்குமுன் தனக்கென்று அக்குகைக்குள் கொண்டுபோய் வைத்திருந்த கொஞ்ச போஜனபதார்த்தங்களை அவர்களிருவரும் சாப்பிட்டு, தங்களுக்குண்டான சரீரவருத்தத்தினின்றும் மனத்திகில்வேதனையினின்றும் சற்று நீங்கலாகி இளைப்பாறினார்கள்.

பட்டணத்திலுள்ள ஜனங்களுக்குத் தன்பேரில் சந்தேகம் பிறந்து, கன்னிகை ஒளித்திருக்கும் குகை ஒருவேளை வெளிப்பட்டுப்போகுமென்று பயந்து, அவன் மறுநாள் அதிகாலையில் எழுந்து அவளைத் தனிமையாய் அவ்விடத்தில் வைத்துவிட்டு, அங்கிருந்து முக்குளித்துக் கரையேறிப் பட்டணம்போய்ச் சேர்ந்தான். அன்று பகலெல்லாம் குகைக்குள் தான் தனிமையாய் வைத்துவிட்டுவந்த மகா விலையுயர்ந்த தன் பொக்கிஷமாகிய அக்கன்னிகையைப்பற்றியே இடைவிடாது நினைத்துக்கொண்டிருந்தான். சாயுங்காலமானஉடனே அவளுக்குப் படுப்பதற்குப் பாயும், உடுப்பதற்கு நல்ல மாற்றுவஸ்திரங்களும், உண்பதற்குக் கனிவர்க்கங்கள் முதலிய உசித போஜனபதார்த்தங்களும், பூசிக்கொள்ளுவதற்குப் பரிமளவாசனையுள்ள ஓர்விதச் சந்தனத்தைலமும் சம்பாதித்துத் தன்னுடன் எடுத்துக்கொண்டு, அதிவிரைவாய்க் குகைக்குப்போய் மிகுந்த அன்போடு அவற்றை அவளுக்குக் கொடுத்து,

கொஞ்சநேரம் அவளோடு இன்பமான சம்பாஷணைசெய்துகொண்டிருந்தான். இவ்வாறு அவன் தகுதியான சமயங்களில்மாத்திரம் மிகவும் சாவதானமாய்க் குகைக்குப்போய்க் கன்னிகையைக் கண்டு, அவளுடன் சொல்பநேரம் சந்தோஷமாய்ப் பேசிக்கொண்டிருந்துவிட்டுப் பின்பு தன்னிடத்திற்குத் திரும்பி வந்துவிடுவான். இப்படியிருக்கையில், ஒருநாள் அவன் அவளிடத்திற்குப் போயிருந்தபோது தன் காதல் சிறப்புரைக்கத் துணிந்து அவள்மீது தன்மனதில் வெகுகாலமாய்த் தோன்றி, பெருகிக்கொண்டுவந்த அன்பின் வரலாற்றை மிகுந்த உருக்கத்தோடுஞ் சாதுர்யத்தோடும் அவளுக்கு விவரித்துச்சொன்னான். இதைக் கேட்டமாத்திரத்தில் அவள் முகம் நாணத்தாலும் அன்பினாலும் இலங்கிற்று. சற்றுநேரத்திற்குப்பின் அவள் அவனை நோக்கி: "என் உத்தம அன்பனே! எனதுள்ளத்திலும் வெகுநாளாய் உன்மீது மிகுந்த அன்பும் நன்மதிப்பும் உண்டாகி பலத்துக்கொண்டேவந்தன. ஆகிலும் நான் வேறொருவனுக்கு வாழ்க்கைப்பட நியமிக்கப்பட்டபடியால், எனக்கியல்பாயுண்டான விருப்பங்களை என்னால் இயன்றமட்டும் அடக்கி ஆண்டுவந்தேன். ஆனால் இப்போது என் பெற்றோர் முதலிய குடும்பத்தாரனைவரும் கொடுங்கோலரசனின் குரூர ஆக்கினையினால் மடிந்துபோனதினாலும், நீ என்னிடத்தில் அதிசயமான அன்பையும் உருக்கத்தையும் பாராட்டி, என்னிமித்தம் உனக்கு வரத்தக்க பெருமோசங்களுக்கு அஞ்சாமல் சர்வஜாக்கிரதையுடன் என்னை உயிர்மோசத்தினின்று ஆச்சரியமானவிதமாய் ரக்ஷித்தபடியாலும், முன் எனக்கு இயல்பாய் உன்மீதிலுண்டாகி அடங்கிக்கிடந்த காதல் இப்போது தட்டுத்தடையின்றி எண்மடங்காய்ப் பெருகி எரிகின்றது. உன் அளவுகடந்த அன்பினாலும், அதிசயமான உதாரகுணத்தாலும் நீ என் மனதை முற்றிலும் வென்று உனக்கு அடிமையாக்கிக்கொண்டாய். நான் முற்றும் உனக்குச் சொந்தமானவள்; என் அன்பைக் கையாளுவதற்கு நீயே பாத்தியஸ்தன், வேறொருவனுமில்லை. இதோ நான் என்னை முற்றிலும் உனக்கு ஒப்புவிக்கிறேன், என்னை ஏற்றுக்கொள்" என்றாள். இதைக் கேட்டமாத்திரத்தில் அவன் ஆநந்தபரவசமாகி, அவளைத் தன் உயிருக்குயிராக மதித்துத் தழுவிக்கொண்டான். அதுமுதல் அவர்கள் இருவரும் கடல்சூழ்ந்த அவ்வேகாந்தக் குகைக்குள் சந்தோஷசாகரத்தில் மூழ்கினவர்களாய்க் காலத்தைக் கழித்

துவந்தார்கள். இக்குகையானது அவர்கள் இருவரும் சந்தோஷமாய்க் கூடியிருப்பதற்கு மிகவும் வசதியான இடமாயிருந்தபோதிலும், அவன் அவ்விடத்தில் அதிகநேரம் பின்னிட்டால் அல்லது அவளிடத்திற்கு அடிக்கடி போய்வந்தால் பட்டணத்திலுள்ள ஜனங்கள் ஒருவேளை சந்தேகப்பட்டு, கன்னிகையின் ஒளிப்பிடத்தைக் கண்டுபிடிக்க ஏதுவுண்டாகுமென்று பயந்தபடியால், அவளைவிட்டு அவன் அடிக்கடி வெகுநேரமட்டும் பிரிந்திருக்கவேண்டியது அவசியமாயிருந்தது. இப்படிப் பிரிந்திருப்பது அவர்கள் இருவருக்கும் சகிக்கக்கூடாத வேதனையாயிருந்தது. ஆகையால் யாதொரு பயந்திகிலின்றித் தன் இஷ்டப்படி அவளோடு கூடிவாழ்வதற்கேற்ற வேறொரு இடத்திற்கு அவளைக் கொண்டுபோய்ச் சேர்க்க எப்பொழுது சமயம் வாய்க்குமோவென்று இடைவிடாது ஏங்கித் தவித்துக்கொண்டிருந்தான். தன் அதிநேசஸ்திரீயைப் பலவித சங்கடங்களோடுகூடிய அவ்விருட்டுக் குகையினின்று சுகத்தையும் உச்சாகத்தையும் கொடுக்குஞ் சூரிய ஒளியுள்ளதும், சந்தோஷ சவுக்கியத்திற்கு வேண்டிய பொருட்கள் அகப்படத்தக்கதுமான ஓரிடத்திற்குக் கொண்டு போகவேண்டுமென்று தீராத கவலையுள்ளவனாயிருந்தான். ஆகையால் அவன் அநேகநாள் யோசனைசெய்து, தன் சிநேகிதர்களையும் தனக்குக் கீழ்ப்பட்ட ஜனங்களையும் ஏவி, அவர்கள் தங்கள் பெண்சாதி பிள்ளைகள் முதலியவர்களோடு பீஜி தீவுகளுக்குத் தன்னுடன் வலசைவாங்கிப்போகச் சம்மதிக்கும்படி செய்தான். இப்படி அவர்கள் புறப்பட்டுப்போவது கொடுங்கோலரசனுக்குத் தெரிந்தால், அவனால் பல இடையூறுகள் நேரிடுமென்று பயந்தபடியால் அவர்கள் போகுமிடத்தைத் தங்கள் சொந்த மனைவிகள் வேலையாட்கள் முதலியவர்களுக்குங்கூட வெளிப்படுத்தாமல் இரகசியமாய் வைத்திருந்தார்கள். பின்பு ஒரு பெரிய படகை ஆயத்தஞ்செய்து, சமுத்திரயாத்திரைக்கு அவசியமான எத்தனங்களையெல்லாஞ் செய்துகொண்டு, அவர்கள் வாவுபட்டணத்தை விட்டுப் புறப்படப் போகுஞ்சமயத்தில், பிரதானியை நோக்கி: அவன் சிநேகிதர் முதலிய ஜனங்கள், "நீர் இவ்விடத்திலிருந்து ஓர் பெண்ணைத் தெரிந்து விவாகஞ்செய்துகொண்டு, பீஜி தீவுகளுக்குப் போவது உத்தமம்" என்று அவனை மிகவுங் கேட்டுக்கொண்டார்கள். அதற்கவன்: இவ்விடத்தில் எனக்கு ஒரு பெண்ணைத் தேட

வேண்டிய அவசியமில்லை. நாம் போகும் வழியில் எனக்கு ஒரு பெண் அகப்படுவாளென்று நம்புகிறேன்'' என்றான். இதை அவர்கள் ஓர் பரிகாசவார்த்தையென்று உறுதியாய் எண்ணினபோதிலும், அவனை மீறுத்துப்பேச ஒருவனும் துணியாமல், எல்லாரும் அவனுடைய கட்டளைக்குக் கீழ்ப்படிந்து படவில் ஏறிப் புறப்பட்டார்கள்.

அவர்கள் இப்படிப் படவிலேறிப்போகையில் பிரதானியானவன் அவர்களுக்குக் காட்டுந்திசையிலே படவை ஓட்டினார்கள். படவு ஹாங்கா தீவின் கரையோரமாய் கற்பாறைக்குச் சமீபமாய் வந்த உடனே, அவன் அதை அங்கே நிறுத்தும்படி உத்தரவுசெய்து, தன் ஜனங்களை நோக்கி: "நான் கடலுக்குள்ளே போய் என் பெண் சாதியை இட்டுக்கொண்டு வருமட்டும் நீங்கள் இங்கே பொறுமையாய்க் காத்திருங்கள்'' என்று சொல்லிவிட்டு, அவர்கள் மறுவார்த்தை சொல்லுமுன்னே அவன் திடீரெனக் கடலுக்குள் பாய்ந்து அவர்கள் கண்ணுக்கு மறைந்து முக்குளித்து, விலைமதிக்கக்கூடாத தன் பெரும்பொக்கிஷமும், தன் உயிருக்குயிரானவளுமான தன் பெண்சாதியிருக்கும் குகைக்குள் பிரவேசித்துவிட்டான். படவிலுள்ளவர்கள் இதைக் கண்டஉடனே மிகவும் பிரமித்தார்கள். தங்கள் பிரதானிக்குப் பைத்தியம் உண்டாயிற்றென்று சிலர் நினைத்தார்கள். கொஞ்சநேரமானபின்னும் பிரதானியைக் காணாததினால், ஒருவேளை அவனை ஒரு சுறாமீன் பிடித்துக்கொண்டு போயிருக்குமோவென்று அவர்களெல்லாரும் மிகுந்த கவலையும் திகிலுமடைந்தார்கள். இச்சமயத்தில் என்னசெய்கிறதென்று தெரியாமல் அவர்கள் திகைத்துக்கொண்டிருக்கையில், கடலில் அவன் பாய்ந்த இடத்தில் சிலர் விழுந்து முக்குளித்து அவனைத் தேடிப் பார்ப்பது நலமென்று சிலர் சொன்னார்கள். வேறுசிலரோ: அவன் வேடிக்கைக்காக மற்றவர்களைத் திகைக்கச்செய்யும்பொருட்டு ஜலத்தில் முக்குளித்துப் போய்க் கற்பாறையில் மறைவான ஓர் மூலையில் கொஞ்சநேரம் மறைந்திருந்துவிட்டு, பின்பு வெளியேவர உத்தேசித்திருப்பானென்றார்கள். இவ்வாறு அவர்கள் பலவித சந்தேகங்களடைந்து திகைத்துக்கொண்டிருக்குஞ்சமயத்தில், திடீரென அப்பிரதானியானவன் மகா சௌந்தரியமுள்ள ஓர் பெண்ணைத் தன் கையில் பிடித்துக்கொண்டு, ஜலத்தினின்று வெளியே வந்து படவிலேறி உட்கார்ந்தான். ஜனங்கள் இதைக் கண்டமாத்

திரத்தில் சொல்லிமுடியாத பிரமிப்பை அடைந்து, அந்தப் பெண்ணானவளை ஓர் சமுத்திரதேவதையென்று நினைத்தார்கள். பின்பு அவளுடைய முகத்தைக் கூர்ந்துபார்த்தபோது, கொடுங்கோலாசனுடைய கடுங்கோபத்திற்குத் தன்னுடைய குடும்பத்தாரனைவரோடுங்கூட இரையாகி மாண்டுபோன கன்னிகையின் முகச்சாயல் பூரணமாய்க் காணப்பட்டபடியால், இறந்தவளுடைய ஆவியானது அச்சமயத்தில் தோன்றிற்றென்று நினைத்து பயந்தார்கள்.

இவ்வாறு அவர்கள் மிகவும் பிரமித்துப்போயிருக்கையில், பிரதானியானவன் தான் குகையைக் கண்டுபிடித்த வகையையும், கன்னிகையைக் கொடுங்கோலாசன் செய்த குரூர ஆக்கினைக்குத் தப்புவித்து அந்நாள்வரையும் பாதுகாத்துப் பாராமரித்துவந்த விதத்தையும் ஆதியோடந்தமாய் விவரித்துச் சொன்னபோது, அவர்களெல்லாரும் சொல்லிமுடியாத ஆச்சரியமும் சந்தோஷமும் அடைந்து, அவனுடைய அதிசய சாமர்த்தியங்களைப்பற்றியும், அரிய சௌந்தரியமும் சிறந்த குணாதிசயங்களும்பொருந்திய அப்பெண்ணானவள் அவனுக்குக் கிடைக்கும்படியா அவன் பெற்ற பாக்கியத்தைப்பற்றியும் மிகவும் வியந்துபேசி, அவனைப் புகழ்ந்துகொண்டாடினார்கள். பின்பு அவர்களெல்லாரும் படவில் யாத்திரைசெய்து, பீஜி தீவுகளுக்குப்போய்ச் சேர்ந்து, அங்கே இரண்டு வருஷகாலம் குடியிருந்தார்கள். அப்பால் ஹொங்கா தீவில் அரசாண்ட கொடுங்கோலாசன் இறந்துபோனானென்று கேள்விப்பட்டு, அத்தீவிற்குத் திரும்பிவந்து, அங்கே அநேகவருஷகாலம் சமாதானமும் சந்தோஷமுமாய் வாழ்ந்துகொண்டிருந்தார்கள்.

## பிள்ளைகளைச் சுகவீனராக்குவதற்கு ஏற்ற வகைகள்.

(தொடர்ச்சி.)

5. பிள்ளைகள் கட்டில் பாய் முதலியவற்றில் படுத்து அமைதலாய் நித்திரைபண்ணும்படி செய்யாமல், அவர்களைத் தொட்டில்களில் போட்டு பலமாய் ஆட்டி, அவர்களுக்கு நித்திரைவரும்படி

செய்வது அவர்களுடைய சுகத்தைக் கெடுப்பதற்கேற்ற செய்கை. பிள்ளைகளைத் தொட்டில்களில் போட்டு ஆட்டுகிறதினால் அவர்களுடைய சிரசிலுள்ள இரத்த ஓட்டத்தில் குழப்பங்கள் நேரிடும். அக்குழப்பங்களினால் அவர்களுக்கு ஓர்வித மயக்கமுண்டாகின்றது. அதினால் அவர்கள் சீக்கிரத்தில் நித்திரையடைகிறார்கள். இவ்வாறு பிள்ளைகளின் சிரசில் குழப்பத்தை உண்டுபண்ணி, அவர்களுக்கு நித்திரை வருவிப்பது அவர்களைச் சுகவீனராக்குவதற்கு ஏற்ற உபாயம். மேலும் ஒடிங்கின துணித்தொட்டில்களில் பிள்ளைகளைப்போட்டு ஆட்டுவதினால் அவர்களுடைய நுட்பமான நெஞ்சறையானது ஒடுக்கப்பட்டு, அதிலுள்ள சுவாச இயந்திரம் சேதப்பட அவர்களுடைய சுகத்திற்குக் கேடுகள் சம்பவிக்கும்.

6. போஜனவிஷயத்திலும் பிள்ளைகளைச் சுகவீனராக்க இடமுண்டு: பிள்ளைகளுடைய ஜீரணக்கருவிகள் மிகவும் நுட்பமானவைகளானபடியால், இலகுவாய் ஜீரணமாகத்தக்க போஜனபதார்த்தங்களுக்குப் பதிலாய் கடினமான சத்துக்களடங்கிய வஸ்துக்களை அவர்களுக்குக் கொடுத்துவந்தால், அவர்களுடைய ஜீரணக்கருவிகளை வருத்தப்படுத்திப் பலவித ரோகங்களை அவர்களுக்கு வருவிக்கலாம். மசாலை முதலிய சம்பாரங்களதிகமாய் அடங்கிய கார்சாரமுள்ள போஜனங்களைப் பிள்ளைகளுக்குக் கொடுப்பதினாலும், அவர்களுடைய நுட்பமான ஜீரணஇயந்திரங்களுக்குச் சேதங்களுண்டாக்கலாம். பிள்ளைகளுடைய சாப்பாட்டு விஷயத்தில் நல்ல ஒழுங்குகள் ஏற்படுத்தி, அவ்வொழுங்குகளின் பிரகாரமே அவர்கள் சாப்பிட்டுவரும்படி செய்யாமல், அவர்களுக்கு இஷ்டமான நேரங்களிலெல்லாம் இஷ்டமான பதார்த்தங்களைச் சாப்பிட்டுவர இடங்கொடுத்தால், அவர்களுக்கு எண்ணிறந்த வியாதிகளையும் துன்பங்களையும் வருவிக்கலாம். பூர்வத்தில் பெலேரிக் ஐலெண்ட்ஸ் என்னுந் திவுகளிலுள்ள ஜனங்கள் தங்கள் பிள்ளைகளை ஓர் நூதனமானவிதமாய் வளர்த்துவந்தார்களாம். அவர்கள் தங்கள் பிள்ளைகளின் பகல்போஜனத்தை உயரமான ஓரிடத்தில் வைத்து, அதைப் பிள்ளைகள் கவண்கல்லினால் அடித்துக் கீழேவிழும்படி செய்யுமட்டும் அவர்கள் சாப்பிட இடங்கொடுக்கமாட்டார்களாம். பிள்ளைகள் சமர்த்துள்ள கவண்காரராகும்பொருட்டு அத்தீவார் இவ்வேற்பாட்டைச் செய்திருந்தார்கள். நமதுதே

சஸ்தரில் அநேகர் பிள்ளைகளை வளர்க்கும்விதம் வெகு விநோதமானது. பிள்ளைகளுக்கு ஏற்ற நேரங்களில் ஏற்ற அளவுள்ள போஜனத்தைக் கொடுத்துவருவது போதாதென்று, நயவார்த்தைகள்; பலவித உபாயங்கள் முதலியவற்றினால் பிள்ளைகளை இணக்கி, யாதொரு வரையறையின்றி அவர்களுக்கு எவ்வேளைகளிலும் போஜனங் கொடுக்கப் பிரயாசப்படுகிறார்கள். இப்படி ஒழுங்கீனமாய்ப் போஜனத்தைக் கொடுத்துவருவதுந்தவிர, போஜனநேரங்களுக்கு இடையில் பலவித தின்பண்டங்கள், தித்திப்புவஸ்துக்கள், கனிவர்க்கங்கள் முதலியவற்றை வரையறையின்றிக் கொடுத்துவருகிறார்கள். இது பிள்ளைகளைச் சுகவீனராக்குவதற்கு நல்லவழியென்பதற்கு யாதொரு சந்தேகமில்லை. போஜனத்தை ஜீரணமாக்கும்பொருட்டு இரைப்பைக்குக் குறைந்தது மூன்று மணிநேரசாவகாசமிருக்கவேண்டும். பின்பு அது சற்றுநேரம் தொழிலற்று இளைப்பாறவேண்டியதும் அவசியம். ஆகையால் இவ்வியற்கைப் பிரமாணத்தைச் சற்றேனும் மதியாது பிள்ளைகளுக்கு யாதொரு கிரமமின்றி அடிக்கடி போஜனத்தையும் போஜனத்திற்கிடையில் பலவித தின்பண்டங்களையுங் கொடுத்துவருவது அவர்களுக்குப் பெரிய தீமைகளை வருவிப்பதற்கு ஏற்ற வகையேயின்றி வேறல்ல.

7. தேகமுயற்சி சரீரசுகத்திற்கு இன்றியமையாதது. விசேஷமாய்ச் சிறுபிள்ளைகளுக்கு அதிக தேகமுயற்சிவேண்டியது அவசியம். இவ்வியற்கைப்பிரமாணத்திற்கேற்கப் பிள்ளைகள் இயல்பாய்ப் பலவகை விளையாட்டில் அதிகப் பிரியமுள்ளவர்களாய்க் காணப்படுகிறார்கள். இதை நமது தேசஸ்தரில் அநேகர் கவனியாது, பிள்ளைகள் போதுமான அளவு தேகமுயற்சிசெய்ய இடங்கொடாமல், மிகவும் சிறுவயதிலேயே அவர்கள் அதிகநேரம் ஓரிடத்தில் உட்கார்ந்து படிப்புமுயற்சிகளைச் செய்யும்படி ஏற்பாடுகள் செய்கிறார்கள். மிகவும் சிறிய பிள்ளைகள் சாதாரண சுயபாஷைப் பள்ளிக்கூடங்களில் நாளொன்றுக்கு எட்டொன்பது மணிநேரமட்டும் உட்கார்ந்து படிப்புமுயற்சிகளைச் செய்துவருவதை அடிக்கடி காணலாம். இப்படிப் பிள்ளைகளின் தேகமுயற்சிக்கு இடையூறுகளை உண்டாக்குவது அவர்கள் செழிப்பாய் வளராமலிருப்பதற்கும், அவர்கள் சரீரம் மிகவும் சிறுத்துப் பலவீனமுள்ளதாய்ப் போவதற்கும், அவர்கள் வளர்ந்து பெரியவர்களானபின்னும் பெ

லனற்றவர்களாயும் எந்த வேலையிலும் சமர்த்து குறைந்தவர்களாயுமிருப்பதற்கும் ஏதுவானது. மேலும் மிகவும் இளம்பிராயத்தில் அதிகமான படிப்புமுயற்சிகளைச் செய்கிறதினால் பிள்ளைகளின் நுட்பமான மனஸ்தத்துவங்கள் அதிகமாய் நெருக்கப்பட்டுப் பலவீனமாகி, பின்னுக்குக் கடினமான மனமுயற்சிகளைச் செய்யச் சக்தியற்றுப்போவார்கள். மேலும் படிப்புமுயற்சிக் காகச் சிறுபிள்ளைகள் அதிகநேரம் ஒரேஇடத்தில் உட்கார்ந்திருக்கிறதினால், நுட்பமான அவர்கள் தேகத்தில் பலவித சேதங்கள் நேரிடும். அவர்கள் நெஞ்சறை சிறுத்துப்போம்; முதுகெலும்பு வளையும்; தேகம் பூரணவளர்ச்சியையும் பெலத்தையும் அடையாது.

## ஸ்திரி வித்தியா வர்த்தமான விருத்தி.

வெண்பா.

மானே கவிவாணர் காமணியே மன்னர்புகழ்
தேனேயென் செல்வத் திருவமுதே—மானிடர்கள்
வேண்டி மகிழும் விநோதினியே யென்னுரைக்கும்
இண்டே யிடமீய வெண்.

கல்லாத பேதையர்கள் கல்வித் துறையியல
எல்லார்க்கு முற்றுரைக்கும் இன்குயிலே—பொல்லாதேன்
செப்புகின்ற சிற்றுரைக்கும் தெற்றென வீந்தருளடேம்
ஒப்புரை யில்லாமயிலே யோங்கு.

அம்மா ஜனவிநோதினி!

எங்களை நன்குபரிபாலனஞ்செய்யும் பிரதாபசீர்த்தியாண்டும் விரவப்பெற்ற அங்கிலேயர்கள் இந்தியா சீர்பெறும்பொருட்டும், இந்தியர்களுந் தம்போலவே சகலவிஷயங்களிலும் விருத்தியெய்தும்பொருட்டும் பிரயோகஞ்செய்தவற்றுள், ஸ்திரி வித்தியாசாலை அதிலோத்தமமுடைத்து. இடமிடங்கள்தோறும் ஸ்தாபிக்கப்பட்ட வித்தியாசாலைகளிலே கிரமமாய்க் கற்ற ஸ்திரிகள், அவ்வாறு கல்லாத அஞ்ஞானாந்தகாரத்திலே அமிழ்ந்தியிருக்கும் ஸ்திரிகள் மத்தியிலே மாணிக்கத்தீபம்போலவே பிரகாசிக்கின்றார்கள்.

சுதேசிகள் வழக்கப்பிரகாரம் புருஷர்கள் ஸ்திரிகளுக்குத் தருமசாஸ்திரபோதனைசெய்வது மிகவும் துல்லபம்; அன்றியும் அவ்வாறு செய்தகாலத்தும் அதனை இழுக்கெனக்கொள்வார்களேயன்றி, யாவரும் சிரமேற்கொளத்தகும் வழக்கெனக் கொள்ளார்கள். ஆதலில், ஸ்திரிகளே ஸ்திரிகளுக்குச் சன்மார்க்க சாரப்போதனைசெய்வது இன்றிமையாது வேண்டற்பாற்று. அவ்வாறு செய்வதற்குத் தற்காலத்திலே இடமிடங்களில் ஸ்தாபனஞ் செய்யப்பட்ட வித்தியாசாலைகள் கணிததற்கரும் பிரயோசனமுடையவாக இருக்கின்றன. இவ்வித்தியாசாலைகளிலே கற்று வல்லோர்களென நன்குமதிக்கப்படுகின்ற ஸ்திரிகள், வீட்டில் வசிக்குங்காலத்து அவ்வாறு கற்கும் தகுதியும் காலமும் இல்லாத மூடத்துவம் நிறைந்திருக்கின்ற ஸ்திரிகளுக்குத் தாங்கள் கற்ற திவ்வியபோதனைகளை அவர்கள் காதிற் புகட்டுகின்றனர். அதினாலே அநேக ஸ்திரிகள் ஒழுக்கசீலமுடையவர்களாய் வருகின்றார்கள். புருஷர்களுக்கு சன்மார்க்கசீலமும் கல்வியும் பொருந்தப்பெற்று.

ஸ்திரிகளை விவாகஞ்செய்வதினும் மிக்கபலனென்னை? புருஷர்கள் மூடர்களாய் எண்ணிறந்த தீங்கிழைத்து, யாவராலும் இகழப்படுபவர்களாய் இருப்பினும், கல்விவலியுள்ள ஸ்திரியை விவாகஞ்செய்வார்களேயாயின், அவ்வளவாய்த் தீங்கிலே ஸ்திரமுற்றிருக்கமாட்டார்கள். புருஷர்களுக்குப் பெரும்பாலதாய் மனசு ஸ்திரிகளிடத்தே ஆசக்தமாயிருக்கின்றதென்பது யாம் கூறுவது அநாவசியகம் ஆதலின், அஞ்ஞானத்திலமிழ்ந்துகிடக்கும் ஸ்திரிகள் போதனையைக் கடைப்பிடித்தொழுகும் புருஷர்கள் திவ்விய ஞானமுஞ் சீலமுமுடைய ஸ்திரிகளைப் பாரியர்களாகப் பெறின் எவ்வகை நலமுறுவார்களென்பது யாங்கூறல் வேண்டுமா?

பூர்வந்தொடுத்து நம் ஸ்திரிகளுக்குக் கல்விபயிற்றாது அஞ்ஞானத்திலே தங்கும்படி நம் புராதனிகள் இயற்றினார்களென்பது நம் தமிழ்ப்பாஷையிலுள்ள சில பதங்கள் பகருஞ் சாட்சியினாலே ஐயமற உணரலாமே! மஹா வித்வாம்ஸம்பொருந்திய (Trench) டிரென்சு என்னும் அங்கிலேய ஆசிரியர், "ஒரு ஜாதியினுடைய விருத்தாந்தம், வழக்கம், ஒழுக்கம், ஆதியவற்றைச்

செல்வதினுணரவேண்டியவிடத்து, அந்த ஜாதியின் பாஷை யைக் கல்" எனக் கூறியிருக்கின்றார். அவர் சொல்லிய் சாமானி யச் சுருதி நம் விஷயத்திலே அதிக பிரயோசனமுடையது. பே தை, மடமான் ஆதிய சில பதங்களிலிருந்து அப்புராதன வழக்கந் தெற்றெனத் துணியப்படுமே. அப்புராதனிகள் அவர்கள் மட மையுடையார்களாயிருக்குமாறு இயற்றியதுமன்றி, அவர்களுக்கு மடமையே ஆபரணமாகவுங் கொண்டனர். குலம், நலம், சீர்த்தி, அலங்காரம் ஆதிய இவ்வனைத்திற்கும் நாசமாகவருகின்ற மட மை அலங்காரத்துளலங்காரமாய் வந்தால், புராதனிகள் எவ்வாறு மூடத்துவமுடையவர்களாயிருந்தார்கள் என்பது துணியப்படும். இதுபற்றியல்லவா, சங்கத்துப்புலவர்கள் யாரையுஞ்சயித்துக் கவி த்துவசம்நாட்டிய மஹா வித்துவாம்ஸம் வாய்ந்த ஔவையார், "தையல்சொற்கேளேல்" எனக் கூறினர். அக்காலத்திலே ஸ்திரி கள் யாரையுங் கற்பியாது மூடாந்தகாரத்து வைத்தமைபற்றியல் லவா நமது பிரதாப சீர்த்திவாய்ந்த ஔவையார் தமது ஜாதியையு மபிமானிக்காது சாமானிய உபகாரங்கருதி ஸ்திரிகளையிழித்துக் கூறினர். நமது சுதேசிகள் ஸ்திரிகளையாண்டும், தங்கள் போக் கியவஸ்துள் ஒன்றெனக்கொள்கிறார்களேயன்றி, தமக்குச் சமமா கவே மானசத்தத்துவம் நிறையப்பெற்றவர்களென ஒருக்காலும் கருதுகிலர். புருஷாத்துமாவைப்போலவே ஸ்திரியினது ஆத்து மாவும் சமமான பிரதானமுடையதென்பதைச் சிறிதுந் தேர்கின் றிலர். தேர்ந்தவழியும் தங்கள் தேர்ச்சின்பிரகாரம் ஒழுகமாறு சிந்திக்கின்றிலர். ஆதலாலல்லவா இந்நாள்காறும் ஸ்திரிகளுக்குக் கல்விபயிற்றாதிருந்தனர்.

ஆயின் இப்போது ராஜ்ஜியத்தால் ஸ்தாபிக்கப்பட்ட பாட சாலைகளில் அநேக சிறுமியர் கற்பதைக் காண்பது நம்போலிய யார்க்கும் பிரமாணாதீதமான மகிழ்வை விளைக்கின்றதே. அன்றி யுந் தருமசிந்தனையும், பரோபகாரமும், பிரஜைகள் விருத்தியும் முக்கியமான விஷயங்களெனக்கொள்ளும் நமது ராஜ்ஜியத்தார் கல்வியிலே தேற்றமடைந்த பெண்களுக்கு அவ்வவர் தகுதிக்கு வாய்ப்பப் பரிசுகொடுத்து, அவர்கள் மனசை யுற்சாகப்படுத்து கின்றார்கள். பாடசாலைகளிலே வந்து கற்பதற்கு இயைவின்றி வீட்டிலேயிருக்கும் ஸ்திரிகளுக்கும் கல்வியுதிக்கும்படி ராஜ்ஜி

யத்தார் உபாத்தியாயர்களை நியோகித்து அவர்களுக்குக் கற்பிக்கின்றார்கள். இப்பேருபகாரம் ராஜ்ஜியத்தார் செய்வது என்ன ஆசீர்வாதம்! விவேகமுள்ள புருஷர்களே! நமது மூடஸ்திரிகளுக்குக் கல்விபயிற்ற நீங்களே ஆரம்பியுங்கள். அவ்வாறே உங்கள் தீபங்களைத் தூண்டுங்கள்.

## பற்கள் பழுதடையாமல் காத்துக்கொளல்.

ஒரு வைத்தியன் பற்களுக்கு நேரிடும் பழுதுகளைத் தெரிந்துகொள்ள விரும்பி, ஜனங்களில் பலவகைப்பட்ட வெவ்வேறு தேஹக்கூறும் வழக்கங்களும் உள்ள 40 மனிதரைத் தெரிந்தெடுத்து, அவர்கள் பற்களிலும் ஈறுகளிலும் பாசியைப்போல் படர்ந்திருக்கும் வஸ்துவை பூதக்கண்ணாடியால் சோதித்து, அநேகர் பற்களில் மிகச்சிறிய மாம்ஸபூச்சிகளும் இலைப்பூச்சிகளும் ஒட்டியிருக்கக்கண்டான். தினந்தோறும் நான்குதரம் தந்தசுத்திசெய்து, ஒருதரம் சப்புநீர் கொப்புளிப்பவர் பற்களில்மாத்திரம் அவ்வகைப் பூச்சிகள் ஒன்றேனும் காணப்படவில்லையென்றும், அந்தப் பூச்சிகளை நிவிர்த்திக்கும்பொருட்டு வழங்கிவரும் கருவிகளுள் புகையிலைரசமும்* அதின் புகையும் பிரயோசனமற்றவையென்றும் தெரிந்துகொண்டான். சிலர் வழங்குகிற நவாச்சார லவணம், சவிர்மண் லவணம், மரப்பட்டைச் சூரணம், வேறு சில மருந்து கலந்த நீர் இவைமுதலானவைகளுக்கும் அப்பூச்சிகளை நாசஞ்செய்யச் சக்தியேயில்லை. சுத்திசெய்த வெள்ளநிறமுள்ள சப்புமாத்திரம் இந்த பூச்சிகள்மேல் பட்டால் அவைகளை நிர்மூலமாக்கிவிடுகின்றது. ஆகையால் தந்தசுத்தி செய்வதற்கு சப்பே சிறந்த வஸ்துவாயிருக்கின்றது. பொடிப்பொடியாயுதிர்ந்து போகத்தக்க காரையில் கலக்குங்குணம் சர்க்கரைக்கு இருப்பதால், சர்க்கரை பற்களுக்குக் கெடுதி என்று நிரூபித்திருக்கிறார்கள்.

தந்தவியாதியினால் சொற்றையாய்விட்ட பற்களையும், முகத்துக்கு அந்தப்பழுதாயிருக்கும் கோணற்பற்களையும் சஸ்திர வைத்தியர் பிடுங்கிவிடுகிற வாடிக்கை வெகுகாலமாயுண்டு. இந்த

நாளில் இவ்வருத்தமான தந்தவைத்தியம் மிகவும் நுட்பமாயும், வருத்தம் சிறிதேனும் தோன்றாமலும் செய்துவருகிறார்கள். பற்கள் விழுந்துவிட்டால் வேறு பற்களைச்சேர்த்து அழகாகக் கட்டிக்கொள்ளும் வழக்கமும் நெடுநாளாயுண்டு. இந்த பற்கட்டு வேலை இப்பொழுது மிகவும் நாகரிகமாயிருந்தும் உணவுக்கு மாத்திரம் விசேஷமாய்ப் பயன்படமாட்டாது.

## டாக்டர் லீ—விடாமுயற்சியினாலுண்டாகும் பயன்.

இங்கிலாந்தில் (Shrewsbury) சுரூஸ்பரி என்னும் நகரில் எண்பது வருடத்திற்குமுன்னர் ஒரு ஏழை அமங்கலியிருந்தனள்; அவளுக்கு மூன்று பிள்ளைகளுளர். அம்மூவரில் சேட்டகுழந்தை ஆண்பிள்ளை. இவர் தம் தாயாரையும் ஏனையோரையும் ஆதரித்தல் கூடாமையென்றெண்ணித் தான் ஒரு தச்சனிடத்திற்போய் மாதம் பன்னிரண்டு ரூபாய் சம்பளத்திலிருந்தார். அவர் கல்வியில் அபேட்சையுள்ளவராக இருந்ததினாலே அகப்பட்ட புத்தகங்களையெல்லாம் படித்துக்கொண்டுவந்தார். இவ்வாறு படித்துக்கொண்டுவருங்காலத்தில், இடையில் (Latin) லத்தீன் மொழிகளும் வசனங்களும் தோன்றின. இவைகளை அறிந்துகொள்ளல் கூடாமையாயினமையால், அப்பாஷையைப் படிக்கப் பதினேழாம் வயதில் ஆரம்பஞ்செய்து இரண்டுவருடத்தில் ஒல்லும்வகை தேர்ச்சியடைந்தார். இவருடைய சம்பளம் மிகவும் சொற்பம். இதில் இவர் தன்னுடைய உணவு வஸ்திரம், வீட்டு வாடகை முதலியவற்றிற்குக் கொடுத்து எஞ்சியதைக்கொண்டே புத்தகங்கள் விலைக்குவாங்கல்வேண்டியதாயிற்று. இவ்வண்ணம் பிரயாசத்துடன் லத்தீன்பாஷையைக் கற்று, (Greek) கிறீக் (Hebrew) எபிரேயு என்னும் பாஷைகளேயும் ஒன்றின்பின் ஒன்றாகக் கற்று முடித்தனர். இவ்வண்ணம் இவர் படித்துக்கொண்டுவருங்காலத்தில் அடிக்கடி கண்ணோயினாலும் இன்னுஞ் சில நோய்களினாலும் விசனமடைந்தார். ஆயினும் ஈதொன்றுக்கும் சிறிதேனும் இடங்கொடாது 25—வது வயதுவரையில் படித்து மகா சீலனாயினார்.

பின்பு இவருக்குச் சம்பளம் இருபது ரூபாய்வரைக்கும் உயர்ந்ததி ஞல், புத்தகங்கள் வாங்கினபணம் நீங்க எஞ்சியதைச் சேகரித்து வைத்து 250 ரூபாய்க்கு ஆயுதங்கள் வாங்கினர். இவ்விதமாறு செல்லுங்காலத்தில் இவரை இவரது யஜமானன் (Worcester Shire) ஒர்செஷ்ட்டர் என்னுமிடத்திற்கு ஓர் தேவாலயம் பழுது பார்த்துவருமாறு அனுப்பினன். அக்காலத்தில் இவர் எனக்கு வயது ஏற்றதாயிற்று, நான் இனி நெடுகப்படிப்பதால் ஆவதென்னே? எனக்குத் தெரிந்த தொழிலைக்கொண்டு காலச்சயம்பண்ணல் வேண்டுமென்றெண்ணித் தன் புத்தகங்களை விக்கிரயஞ்செய்து விட்டு, மாவினைவேலையில் அதிகமாய்ப் பயின்று மணம்புரிந்து, இயன்றஅளவிற் சௌக்கியமாயிருந்துகொண்டு வருகையில் வீட்டிற் றீபற்றி ஆயுதங்களெல்லாம் எரிந்துபோயின. நிர்மானுஷியமான வனாந்தரத்தில் விடப்பட்ட ஒருவனைப்போல ஏது உதவியுமில்லாது தானும் தன் மனைவியும் மிகவுந் துக்கங்கொண்டிருந்தனர். இப்படியிருக்கும் வேளையில் ஓர்நாள் இவர் யாதோ ஆலோசனைசெய்துகொண்டிருக்கும்போது தான் சிறுவயதிற் கற்ற கல்வியை நினைத்து, அதைக்கொண்டாகிலும் ஜீவனஞ்செய்யலாமென்றெண்ணி,அங்ககணிதத்தையும் இலக்கணத்தையும் தீர்க்கமாகப் படித்து ஓர் கிராமத்தில் பாடசாலையொன்றை இயற்றவெண்ணினர். இம்முயற்சி பணம் இல்லாததினலே தவறிப்போயிற்று. இப்படியிருக்குங்காலத்தில் விசேஷசுவிசேஷகராகிய Archdeacon Corbett என்பவர் இவரைப்பற்றிக் கேள்வியாகி, அவரை வரவழைத்து (Shrewsbury) சுரூஸ்பரி என்னுமிடத்திலிருந்த (Blue School) புளூ ஸ்கூல் என்னும் பாடசாலைக்குத் தலைமை உபாத்தியாயராக நியோகித்தனர். இப்பள்ளிக்கூடத்திலிருந்த மற்ற உபாத்தியாயர்களுடன் மிகவும் அன்னியோன்னியமாயிருந்து அவர்களுதவியால் (Arabic) அரபிக் (Hindustani) இந்துஸ்தானி (Persian) பர்சியன் என்னும் பாஷைகளைக் கற்றனர். இவ்வாறு இருக்கையில் இவருடைய நண்பரில் சிலர் இவருக்குப் பணங் கொடுத்து (Cambridge) கேம்பிரிட்ஸ் என்னும் சர்வகலாசாலையிற் படிக்கும்வண்ணம் செய்தனர்கள். அவ்விடம் அவர் பாதிரிப்பட்டம் பெற்று (Arabic) அரபிக் (Hebrew) எபிரேயு என்னும் பாஷைகளுக்கு பிரதமப் பண்டிதாக ஏற்படுத்தப்பட்டார். சிலகாலஞ்சென்று அரசனல் மதிக்கப்பட்டு (Bristol)

பிறிஸ்றல் என்னுமிடத்திலிருக்கும் தேவாலயத்திற்குக் குருவாக நியோகிக்கப்பட்டு, அநேக விசேஷமான புத்தகங்களுக்குக் கிரந்தக்கர்த்தாவாகி, 1852–மாண்டு (Reverend Dr. Lee) ரெவரண்டு டாக்டர் லீ என்னும் புண்ணியவான் பரலோகப்பிராப்தியெய்தினர்.

மேற்கூறப்பட்டிருக்கும் லீ என்பவர் எவ்வளவு ஏழ்மையான நிலைமையிலிருந்து எவ்வளவு மேன்மையான ஸ்திதியை அடைந்தார். விடாமுயற்சியானது எவ்விதமான துன்பங்களையும் இடையூறுகளையும் மேற்கொள்ளுமென்பதற்குச் சந்தேகமுண்டோ? இதை நினையாமல் நமக்குச் சங்கடங்கள் நேரிடுங்காலங்களில் நம்மாலாவதென்னவென்று சொல்லி எல்லும் முயற்சிகளைத் தேடாதிருத்தல் மடமையே. நாம் சரித்திரத்தை நோக்குங்கால் உலகத்தில் கீர்த்திமாலையைச் சூண்டவர்களில் அநேகர் தங்கள் வாழ்நாட்கள் துவக்கத்தில் மிகுந்த துன்பத்தை அடைந்தவர்களாகத் தோன்றுகின்றது. இவர்களில் சிலர் இரும்பாலைகளிலும் சிலர் பஞ்சாலைகளிலும் வேலைசெய்துகொண்டிருந்தவர்களாகவும், சிலர் ஆடுமாடுகளை மேய்த்துக்கொண்டிருந்தவர்களாகவும் தெரியவருகின்றது. இவர்கள் மேன்பாட்டை அடைந்ததற்கு விடாமுயற்சியே காரணம். ஆகையால் நமக்கு எவ்வித சங்கடங்கள் நேரிட்டபோதிலும் விடாமுயற்சியையே பொருளாகக் கைக்கொள்ளல் வேண்டும்.

## ஜனக்கணக்கிடல்.

இராணியவர்களிடமிருந்து பெற்ற கட்டளையின்படி இப்பொழுது நமது சென்னை அரசாட்சியார் தங்கள் ராஜதானியிலிருக்கும் குடிகளின் தொகையைத் தெரிந்துகொள்ளும்பொருட்டு வேண்டிய எத்தனங்களை முயன்றுகொண்டிருக்கிறார்கள். எவ்விதமான முயற்சிகளைச் செய்தபோதிலும், அவைகளெல்லாம் வீணாகப்போகின்றனவே! ஜனங்கள் இப்பொழுது குடிக்கணக்கிடலை வேறுவேறுவிதமாக அர்த்தஞ்செய்துகொண்டு, தங்கள்தங்கள் வீட்டின் ஜனங்களுடைய சரியான விவரங்களையும் தெ

கைகளையும் தெரிவிக்கச் சிறிதேனும் பிரியப்படுகிலர். இப்படிப் பிரியப்படாதிருப்பவர்கள் ராஜாங்கத்தாருடைய எண்ணமென்னமென்றாவது விசாரிக்கிறார்களா? அதுவுமில்லை. இப்பொழுது நமது ராஜாங்கத்தார் குடித்தொகை கணக்கிடல் என்னகாரணமென்பது அநேகருக்குத் தெரியாதாகையால், யாம் இங்ஙனம் சிலவாறுரைப்போம்.

நமதரசர்களாகிய அங்கிலேயர் நமது தேசத்திற்கு வருமுன் இத்தேசம் என்ன ஸ்திதியிலிருந்ததென்பது இதிகாசமறிந்த யாவருக்கும் தெரியுமல்லவா? இந்து ராஜர்கள் அரசாண்டகாலத்தில் ஒருவரோடொருவர் யுத்தஞ்செய்து, ஜனங்களுடைய நன்மையைக் கிஞ்சித்தேனும் பாராட்டாமல், தங்கள் நயத்தையே மேன்மையாகக் கொண்டிருந்ததால் பலவிதத்தாலும் விர்த்தியடையாமல் எந்நாளும் ஏக்கமுற்றிருந்தார்கள். இவர்களுக்குப் பின்னால் மகமதியர்கள் மேற்குத்தேசங்களிலிருந்து படையெடுத்துவந்து, பாரதத்தைக் கீழ்ப்படுத்தி சொல்லிமுடியாத அதிக்கிரமங்களைச் செய்துகொண்டிருந்தார்களல்லவா? டில்லியில் கொடுங்கோல் நடாத்திக்கொண்டிருந்த சக்கரவர்த்திகளிலொருவனாகிய (Mahomed Toghluk) மகமத் தோக்ளாக் என்பவன் என்னென்ன பாதகமெல்லாஞ்செய்தான்! ஒருகாலத்தில் டில்லிபட்டணத்து ஜனங்களை தனது சேனையால் சூழ்வித்து, அவர்களை மிருகங்களை வேட்டையாடுகிறதுபோல வேட்டையாடினதும் நாம் சரித்திரமூலமாய் அறிகிறோமல்லவா? இப்பொழுது நம்மை ஆளுகின்ற அங்கிலேயர் இந்து அரசர்களும் மகமதிய அரசர்களும் நடத்தினாற்போலா நம்மை நடத்துகிறார்கள்? நம்முன்னோரை அரசாண்ட மகுடாதிபருக்கும் இப்போது நம்மை ஆளுகிறவர்களுக்கும் அளவிடற்கரிய வித்தியாசமுண்டென்பதை யாவரும் எளிதில் தெரிந்துகொள்ளக்கூடிய விஷயந்தானே. இருநூறாண்டாக நம்மை அரசாண்டுவருகிறார்களே, நம்முடைய நடையுடை பாவனை மதம் முதலியவற்றில் அவர்கள் வீணாகத் தலையிடுகிறார்களா? அல்லது நாம் இன்னதுசெய்யவேண்டும் இன்னது செய்யக்கூடாதென்று நமது மனச்சாட்சிக்கு விரோதமாக ஏதாவது கட்டளையிடுகிறார்களா? அங்கிலேயர் இந்துதேசத்திற்கு வந்தநாள்முதல் இந்துக்களுக்கு நன்மையையே செய்யவேண்டும் என்ற கருத்துடன் பாடு

பட்டுக்கொண்டு வரும்பொழுது, நாம் அவர்களுக்கு விரோதமாய் யாதேனும் தீங்குநினைத்தல் தருமமன்றே. அவர்கள் நமக்கு விளைக்கும் பயன்களெல்லாவற்றிற்கும் நாம் எக்காலமும் நன்றியுள்ளவர்களாயிருத்தல்வேண்டும். மேலும் அவர்கள் நம்முடைய நன்மையை விரும்பினவர்களாகையால், இதுவரையிலும் நமக்கு எவ்வளவு நன்மைகளைச் செய்திருக்கிறார்களென்பதையும், இன்னும் என்னென்ன செய்யவேண்டுமென்பதையும், தங்கள் ராஜ்ஜியத்திலிருக்கும் ஜனத்தொகையை விவரமாய்க் கணித்து, படித்தவர்கள் இத்தொகையர்களித்தனை, படிக்காதவர்களித்தொகையர், ஏழைகளித்தொகையர், வேலைசெய்யக்கூடியவர்களித்தொகையர், செய்யக்கூடாதவர்களித்தொகையர் என்று தெரிந்துகொள்ளல் ஆவசியகமல்லவா? படிக்காதவர்களித்தனைபேரிருக்கிறார்களென்று கண்டாற்றானே வேண்டிய பள்ளிக்கூடங்களைத் தாபிக்கலாம்? ஏழைகளித்தனைபேரிருக்கிறார்களென்று தெரிந்தாலல்லவோ, அவர்கள் சுலபமாய் வைத்தியம் செய்வித்துக்கொள்ள ஆஸ்பத்திரிகளைத் துரைத்தனத்தார் ஏற்படுத்தலாம்? இவைகளைத்தவிர, உயிருக்கும் பொருளுக்கும் சேதம்வாராவண்ணமும், நீதிதவறாமலும் நடக்கின்ற ராஜாங்கத்தில் ஜனங்கள் நாளுக்குநாள் விர்த்தியடைகிறதுமல்லாமல், வேறுதேசங்களிலுமிருந்து வந்து குடியேறுகிறது சாதாரணம். இப்படிக்கெல்லாம் நமது துரைத்தனத்தார் நமக்கு நன்மையே செய்யவிரும்ப நாம் அவர்கள் தீங்குசெய்யவெண்ணுகிறார்களென்று நினைப்பது தருமத்துக்கடாதகாரியமல்லவா?

ஜனத்தொகைக் கணக்கெடுக்கும் உத்தியோகஸ்தர்கள் வந்து நம்முடைய வீடுகளில் இத்தனைபேர்களிருக்கிறார்களென்று கேட்கும்போது, நாம் உண்மையைச் சொன்னால் நம்முடைய வீட்டிலிருப்பவர்களில் யாராவது இறந்துபோவார்களென்று சிலர் நினைக்கிறார்கள்; இது மடமையேயன்றி வேறென்ன? நாம் உண்மையைச் சொல்லாவிடில் பொய்யராய் இருநூறு ரூபாய் அபராதத்துக்குள்ளாகுவதுமல்லாமல், நமக்குத் துரைத்தனத்தார் செய்ய எண்ணியிருக்கும் நன்மையையும் இழந்துவிடுவோம். உண்மையைச் சொல்லாதிருத்தலினால் நாமே நமக்குத் தீங்குவிளைக்கிறோமல்லது வேறன்று.

ஜனத்தொகைக் கணக்கெடுப்பது நவினவரி போடுகிறதற்கென்

றும் சிலர் நினைக்கிறார்கள். அப்படியொன்றும் நமது துரைத்தனத்தார் பலாற்காரமாய்ச் செய்யமாட்டார்கள். அவர்கள் நூதன வரிபோட நினைத்தால் ஜனத்தொகைக் கணக்கெடுப்பது அவசியமில்லையே. வரிபோட நினைத்தால் சட்டநிரூபண சபையார் வரிபோட்டிருக்கிறார்களென்று சொல்லி, உத்தியோகஸ்தர்களை அனுப்பித் தண்டல்செய்துகொண்டுபோகலாமே. இன்னுஞ் சிலர் வீடுகளில் புருஷர்கள் அதிகமாயிருந்தால் அவர்களைப் பிடித்துச் சண்டைக்குப்போகிறதற்காகத் தண்ணீர்மேலேற்றிவிடுவார்களென்று பயங்கொண்டு உண்மையைச் சொல்வதில்லை. சில மாதங்களுக்குமுன்பாக இலங்கையில் கொழும்பு என்னும் பட்டணத்தில் ஜனத்தொகைக் கணக்கிட்டபோது, அநேகர் தங்களைப் பிரான்ஷிய புருஷிய யுத்தத்திற்காகப் பிடித்தனுப்பப்போகிறார்களென்று எண்ணி, சிலநாள் காட்டில் ஓடிப்போய் ஒளித்துக்கொண்டிருந்து, சூரியன் அஸ்தமித்தபிறகு தங்கள் மனைவிமார் உணவு கொண்டுபோய்க் கொடுக்கச் சாப்பிட்டுக்கொண்டிருந்தார்கள். இப்படி நினைப்பதுவும் மடமைதானே!

அநேகர் சரியாய் வயதுசொல்லுகிறதில்லை. சிலருக்குத் தங்கள் வயதே தெரியாது. ஸ்திரீகள் எப்பொழுதும் தங்கள் வயதைக் குறைத்துச்சொல்வதே வழக்கம். இவர்களுக்குள் தாசிகள் தங்கள் வயதை அதிகமாகக் குறைத்துச் சொல்லுகிறார்கள். வீட்டில் படித்தபெண்கள் இத்தனைபேரிருக்கிறார்களென்று சொல்வதற்கு அநேகருக்குச் சிறிதும் இஷ்டமில்லை.

ஓ! தேசசகோதரர்களே, நாம் இப்படியெல்லாஞ் செய்வது நியாயமன்று. துரைத்தனத்தார் நமக்கு நன்மையை விரும்ப, நாம் நமக்குத் துன்பம் விளைவிக்கப்போகிறார்களென்று நினைத்தல் தகாதகாரியம். ஆகையால் நம்முடைய வீடுகளில் ஜனத்தொகைக் கணக்கெடுக்கும் உத்தியோகஸ்தர்கள் வந்து கேட்கும்போது நாம் உண்மையே சொல்லவேண்டும். நமக்குத் துரைத்தனத்தார் துன்பம் விளைவிப்பார்களென்று கனவிலும் நினைத்தல்வேண்டாம். இவ் விஷயங்களைத் தெரியாதவர்கள் அநேகர் இருக்கிறார்களாகையால், கல்விமான்களாயும் புத்திசாலிகளாயுமிருப்பவர்கள் தெரியாதவர்களுக்கு இந்த விஷயங்களை விளங்கப்படுத்துவது கடமை. புத்திசாலிகள் அறிவிலிகளாகிய ஜனங்களுக்கு அவர்களால் செய்யப்படும் பான்மையவாய் கிரிகைகள் எவையெனக் கூறுதுவாளா